# உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – நிறுவன விவரக்குறிப்பு / நிறைவேற்றுப் பொழிப்பு

அத்தியாயம் 02 – முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

அத்தியாயம் 03 – ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச்செயற்றிறன்

அத்தியாயம் 04 – செயற்றிறன் குறிகாட்டிகள்

அத்தியாயம் 05 – நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDG) அடைந்து கொள்ளுதல் பற்றிய செயற்றிறன்

அத்தியாயம் 06 – மனிதவள விவரக்குறிப்பு

அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை

# அத்தியாயம் 01 – நிறுவன விவரக்குறிப்பு / நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1. அறிமுகம்

1884 முதல் 1932 வரை எமது நிர்வாகமானது மட்டக்களப்பு உள்ளூர் சபையின் கீழ் இருந்தது. மட்டக்களப்பு நகரமானது ஒரு சில வட்டாரங்களைக் கொண்டே உள்ளூர் சபையால் நிர்வாகிக்கப்பட்டது. இது 1933 இல் 08 வட்டாரங்களைக் கொண்ட நகர சபையாகத் தரமுயர்த்தப்பட்டது. 1944 இல் வட்டாரங்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்த்தப்பட்டது. 1956 இல் மட்டக்களப்பு நகரசபையின் பரப்பளவு விரிவுபடுத்தப்பட்டு, மேலும் 04 வட்டாரங்கள் சேர்க்கப்பட்டு மொத்தம் 14 வட்டாரங்களைக் கொண்ட நகர சபையாகக் காணப்பட்டது. பின்னர் 1967 இல் மாநகரசபையாகத் தரமுயர்த்தப்பட்டதுடன் வட்டாரங்களின் எண்ணிக்கை 19 ஆக அதிகரிக்கப்பட்டது. மேலும் 20 வட்டாரங்களாக அதிகரிக்கப்பட்ட மட்டக்களப்பு மாநகரசபையானது 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முறையே, உள்ளூராட்சி அமைச்சினதும் மற்றும் முதலமைச்சர் செயலகத்தினதும் உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்தினதும் நோக்கெல்லையின் கீழ் செயற்பட்டது. மேலும், மட்டக்களப்பு மாநகரசபையானது நாட்டினது நிலைபேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிக்கும் பொருட்டு பதிலிறுக்கத்தக்க, இயைபான மற்றும் பரந்துபட்ட பதவியணி அத்துடன் ஊதிய முகாமைத்துவ மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வேறு அரச நிறுவனங்களுடனான கலந்தாலோசனையுடன் கொள்கைகளை வகுத்தமைக்கின்றது.

## 1.2. நிறுவனத்தின் தூரநோக்கு, பணிநோக்கு, நோக்கங்கள்

### தூரநோக்கு

"சகோதரத்துவமும், பாதுகாப்பும் மிக்க எழில்மிகு தூய நிறைவான நவீன நகரம்"

### பணிநோக்கு

"மக்களின் வளமான வாழ்விற்கு பங்களிப்புடன் கூடிய அபிவிருத்தித் திட்டங்களுடனான ஆரோக்கியமான சூழலைக் கொண்ட நல்லாட்சியை உருவாக்குதல் "

### நோக்கங்கள்


1. மக்களுக்கு சேவை வழங்கும் உத்தியோகத்தர்களை நிர்வகித்தலும், நிர்வாகத்தை சிறப்பான முறையில் நடாத்துதலும்.
2. பாதுகாப்பான ஒரு தூய நகரமாக மாற்றியமைத்தல்.
3. வரியிறுப்பானர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
4. மக்களுக்கு ஆரோக்கியமாக வாழ்வாற்கான ஒரு சு+ழலை உருவாக்குதல்.
5. மாநகரத்தில் மக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் நல்லாட்சியையும் உருவாக்குதல்.
6. மக்கள் தேவைகளை நிறைவேற்றக்கூடிய தெளிவான நியமங்களை நிர்ணயித்து உற்பத்தித் திறன் மிக்க சேவையாற்றல் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் செயற்படல்.
7. முக்கள் வாழ்க்கைக்கான அடிப்படைச்சேவைகளின் பொறுப்புத் தன்மையையும் (Accountability) உடன்செயற்படும் (Responsiveness) தன்மையுடனான செயற்பாடுகளை உருவாக்கி செயலாற்றுதல்.
8. மக்களின் முறைப்பாடுகளுக்கு பயன்மிக்க தீர்வுகளை வழங்குதல்.

9. சேவை பெறுவோருடன் அன்றாடம் தகவல்களை பரிமாறிக்கொள்வதும் அறிவுரைகளை பெற்றுக்கொள்வதும் அவற்றில் பயனுறுதி மிக்கவற்றை அமுல்படுத்தலும்.
10. சேவையை பெற வருவோருக்கு நடைமுறையில் உள்ள அலுவலக சேவைகள் பற்றிய விரிவான தகவல்களை வழங்குதல்.
11. பக்கசார்பற்ற பரிசோதனை மற்றும் உள்ளகக்கணக்காய்வின் மூலம் சேவைகளை (வழங்கப்படும்) பக்கசார்பின்றி மதிப்பீடு செய்தலும் பொருத்தப்பாடுடையவற்றை செயற்படுத்தலும்.
12. வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறுவதையும் உறுதிசெய்து சேவை பெற வருவோருக்கும் ஊழியர்கட்கும் இடையிலான தொடர்புகளை இலகுவானதாகவும், சிக்கலற்றதாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் மாற்றியமைத்து செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
13. ஊழியர்கள் ஒன்றுபட்டு மகிழ்வாக சேவையாற்றும் உள்ளக, புற அலுவலக சூழலை ஏற்படுத்தல்.
14. ஊழியர்கள், தனியார்துறை மற்றும் சிவில் சமூகம் என்பவற்றுக்கிடையில் வலுவானதும் ஒத்துழைப்புடன்கூடியதுமான இருவழித்தொடர்பினை வலுப்படுத்தலும், மேம்படுத்தலும்.

## 1.3. பிரதான தொழிற்பாடுகள்

1. வீதி விளக்குகளை பொருத்துதலும் அதன் முகாமைத்துவமும்
2. திண்மக்கழிவகற்றலும் மீள்சுழற்சிச்செயற்பாடும்
3. சாக்கடைகளின் பராமரிப்பும் வடிகால்கள் நிர்மாணமும்
4. தகனமயானம் (தகனசாலை) மற்றும் மயான பராமரிப்பு
5. கட்டுமான பணிகட்கான அனுமதி வழங்கல்
6. வீதி மற்றும் பௌதிக உட்கட்டுமான அபிவிருத்தி செயற்பாடுகள்
7. பொதுச்சந்தை பராமரிப்பு
8. பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் பராமரிப்பு
9. நூலகங்கள் அபிவிருத்தியும் முகாமைத்துவமும்

## *1.4. நிறுவன வரைபடம்*



**1.5. வெளிநாட்டு நிதியீட்டக் கருத்திட்டங்களின் விபரங்கள்**

**அ) கருத்திட்டத்தின் பெயர்:**

**ஆ) நன்கொடை முகவராண்மை**

**இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு**

**ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி**

## அத்தியாயம் 02 – முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

## விசேட அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

மக்களிடம் அறவிடப்படும் வரிப்பணத்தை பயன்படுத்தி மக்களால் முன்வைக்கபடும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்களை தயாரித்து அதனை செயற்படுத்தி வினைதிறனான செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஒரே நிறுவனம் உள்ளூராட்சி மன்றங்களாகும்.

### சவால்கள்

அந்த வகையில் மட்டக்களப்பு மாநகரசபையானது அதன் நிதி மற்றும் அரசினால் வழங்கப்படும் நிதியீட்டங்கள் அரசசார்பற்ற நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் நிதிகளை ஒன்று திரட்டி திட்டமிட்டு பல அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க முனைந்த போதும் கடந்த ஆண்டு ஏற்பட்ட கொரோனா தொற்றினால் அவ்வாறான திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்ய முடியாமல் போனமை மற்றும் திட்டமிடப்பட்ட வருமான மூலங்களில் இருந்து உரிய வருமானத்தை உரிய காலத்தில் அறவிடப்பட முடியாது போனமை எமக்கு ஏற்பட்ட முக்கிய சவாலாக இருந்தமையால் பல குறுங்கால அபிவிருத்தி செயற்பாடுகள்,கட்டுமானப்பணிகள், நலநோம்பு ரீதியாக மக்களுக்குரிய அடிப்படை சுகாதார வசதிகளையும் உரியவாறு நிறைவேற்ற முடியாது போனமை மட்டுமன்றி அறவிடபட வேண்டி இருந்த பெருந்தொகையான வருமானங்களை விடுகை தொகையாக நாம் இழக்க வேண்டி ஏற்பட்டதுடன் திட்டமிடப்பட்ட வருமான அறவீடுகளை முழுமையாக அறவிட முடியாத நிலை ஏற்பட்டது. இதே போன்று கட்டுமான பணிகளை முன்னெடுப்பதற்கான தொழிநுட்ப ரீதியான ஆளணிப்பற்றாக்குறையும் எமக்குரிய பிரதான சவால்களாகும்.

### விசேட அடைவுகள்

எனினும் இத்தகைய அசாதாரண சூழ்நிலையினையும் தாண்டி ‘‘மணல் வீதியில்லா மாநகரம்’’ எனும் திட்டத்தின் கீழ் மணல் வீதிகளை முதல்கட்டமாக கிரவல் வீதியாக மாற்றியமைக்கும் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் உள்வாங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று 2021 ஆண்டில் பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட 13 வீதி அமைப்பு வேலைகள் தார் வீதியாக அமைக்கப்பட்டு அவை மக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டுள்ளது. இவ் வீதிகள் அமைப்பு வேலைகளுக்காக மாநகரசபைக்கு உரித்தான இயந்திரச்சாதனங்களும் மற்றும் தொழிலாளர்களது முழுமையான உழைப்பு மற்றும் முறைமையான மேற்பார்வை என்பன பயன்படுத்தப்பட்டமையின் காரணமாக எம்மால் திட்டமிடப்பட்ட வேலையிலும் பார்க்க கூடுதலான வீதி அமைப்பு வேலைகளை தரமானவையாக செய்து முடிக்க கூடியதாக இருந்தது.

இவை தவிர 10 தார்வீதிகள், 07 கொங்கீற்ட் வீதிகள் மற்றும் 02 வடிகான்கள் என்பன குறித்த வட்டாரத்தில் இயங்கும் சன சமூகநிலையங்கள் ஊடாக ஒப்பந்த அடிப்படையில் நிர்மான

வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு அவை இவ்வாண்டில் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதே போன்று அதிகரித்து வரும் நகரமயமாக்கல் திட்டம் மற்றும் சனத்தொகை அதிகரிப்பு மாநகரை அண்டியுள்ள கிராமங்களின் நிலப்பரம்பல்கள் துண்டாடப்படுதல் மற்றும் மயானகாணிகளை அண்டியுள்ள காணிகள் ஆக்கிரமிக்கப்படுதல் காரணமாக பிணங்களை அடக்கம் செய்வதற்கு தேவையான நிலப்பரப்பு குறுகி வருதல் போன்ற செயற்பாடுகளால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை முன் உணர்ந்து பிணம் எரிக்கும் நிலையம் ஒன்றினை அமைக்கும் பணி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதே போன்று இயற்கை பசளைகளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளை சிறுவர் பங்களிப்புடனான மாதிரி வீட்டுத்தோட்டம் ஒன்றை கோட்டை பு+ங்கா பகுதியில் ஆரம்பித்துள்ளதுடன் இதனை யு+னிசெவ் மற்றும் செறி நிறுவனத்தின் ஆலோசனையுடனும் அனுசரனையுடனும் நடார்த்தி வருகின்றோம். இச்செயற்ப்பாட்டை வீட்டுக்கோர் வீட்டுத்தோட்டம் எனும் திட்டத்தின் கீழ் வட்டாரம் தோறும் விஸ்தரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிராமத்துக்கு ஒரு பொதுச்சந்தை எனும் திட்டத்தின் கீழ் கருவேப்பங்கேனி கிராமம் மற்றும் நாவற்குடா கிராமம் என்பவற்றில் சந்தை கட்டிட தொகுதிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அவை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டுள்ளமை (கருவேப்பங்கேணி பொதுச்சந்தை) குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் தேக ஆரோக்கியம் மற்றும் சுகாதார நலன்களை பேணல்,உடல் வலுவு+ட்டல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் முதற்கட்டமாக நகர்புற பாடசாலைகளில் உடற்பயிற்சி கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அதற்கான உடற்பயிற்சி உபகரணங்கள் மாநகர சபையினால் கையளிக்கப்பட்டு அதன் பயன்பாடு முன்னேற்றம் என்பன கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பின் பாரம்பரிய மற்றும் உடல் ஆரோக்கியத்தினை மேன்படுத்தும் உணவுகளை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் மட்டக்களப்பு பொதுச்சந்தை கட்டிடத்தொகுதிக்கு அண்மையில் பாரம்பரிய உணவகம் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது.

## எதிர்கால இலக்குகள்

தற்காலத்தில் சிறந்த சேவையினை பெறும் நோக்குடன் வட்டார ரீதியாக சமூக பொருளாதார ரீதியான மதிப்பீடுகளை மேற்கொண்டு அதன் அடிப்படையில் மக்கள் பங்களிப்புடனான திட்டங்களை இனங்கண்டு அவற்றை திட்டமிட்டு வினைத்திறன் மிக்க முகாமைத்துவத்தின் மூலம் ஆரோக்கியமான மக்களை கொண்ட தூய நிறைவான தரமான எதிர்கால மாநகரம் ஒன்றை உருவாக்கும் இலக்கை அடைய எதிர்பார்கின்றோம்.

# அத்தியாயம் 03 – ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச்செயற்றிறன்

## 3.1. ஐந்தொகை

**Statement of financial Position as at 31st December 2020**

| - | | - | - | - | - |
|---|---|---|---|---|---|
| | | Not e | **Previous Year** **2019** **Rs.** | | **Current Year** **2020** **Rs.** |
| | **Assets** | | | | |
| | **Current Assets** | | | | |
| 120 | Stores in Hand | 1 | 57,413,793.14 | | 17,329,812.96 |
| 130 | Loans for Utility Services | 2 | | | |
| 140 | Staff Loans | | 38,897,399.89 | | 29,640,750.98 |
| 150 | Recoverable Utility Services | 3 | | | |
| 160 | Revenue Debtors | 4 | 45,155,707.99 | | 31,251,002.45 |
| 170 | Pre-Payments | 5 | 37,487,048.23 | | 2,284,850.00 |
| 180 | Investments | 6 | 419,876,471.68 | | 469,576,404.57 |
| 190 | Cash | 7 | 167,126,997.33 | | 179,134,698.50 |
| | | | **765,957,418.26** | | **729,217,519.46** |
| | **Non Current Assets** | | | | |
| 11 0 | **Fixed Assets** | 8 | **261,784,806.14** | | **267,903,824.64** |
| | **Total Assets** | | **1,027,742,224.40** | | **997,121,344.10** |
| | **Liabilities** | | | | |
| | **Current Liabilities** | | | | |
| 230 | Creditors | 9 | 89,370,199.57 | | - |
| 240 | Receipts in Advance | 10 | - | | - |
| 250 | Refundable Deposits | 11 | 46,982,655.32 | | 42,885,605.18 |
| | | | **136,352,854.89** | | **42,885,605.18** |
| | **Non Current Liabilities** | | | | |
| 220 | Loan Capital | 12 | **-** | | **-** |
| | **Net Assets/Equity** | | | | |
| 210 | Accumulated fund and Reserves | 13 | **891,389,369.51** | | **954,235,738.92** |
| | **Total Equity & Liabilities** | | **1,027,742,224.40** | | **997,121,344.10** |

## 3.2 வருமான செலவினக் கூற்று

# MUNICIPAL COUNCIL,BATTICALOA

### REVENUE & EXPENDITURE STATEMENT
### for the year ended 31st December 2020

| Budjet Estimates 2020 | Object | Description | Notes | Current year 2020 | - | Pervious year 2019 |
|---|---|---|---|---|---|---|
| | | **REVENUE** | 1 | | | |
| 35,500,000.00 | 510 | Rates & Taxes | | 33,194,992.31 | | 31,919,603.94 |
| 19,700,100.00 | 530 | Rent | | 20,984,821.49 | | 28,226,440.99 |
| 4,600,000.00 | 540 | Licences | | 4,483,079.70 | | 14,591,225.26 |
| 17,155,100.00 | 550 | Licences Fees | | 18,948,532.18 | | 12,141,656.11 |
| 9,016,000.00 | 560 | Fees for Service | | 10,867,449.70 | | - |
| 5,400,000.00 | 570 | Other Revenue | | 5,425,460.00 | | 668,293.00 |
| 510,000.00 | 590 | Warrant Cost & Fines | | 713,300.00 | | - |
| 50,000.00 | 600 | Warrant Cost,Fines & Panalities | | 56,400.00 | | - |
| 2,150,000.00 | 610 | Other Revenue | | 4,911,515.93 | | - |
| 44,600,000.00 | 620 | Revenue of Interest | | 42,551,982.37 | | - |
| 60,000,000.00 | 630 | Miscelenious Revenue | | 55,468,763.50 | | 96,742,422.06 |
| **198,681,200.00** | | **OWN REVENUE** | | **197,606,297.18** | | **184,289,641.36** |
| 220,000,000.00 | 630 | Revenue Grants | | 186,034,839.83 | | 164,158,215.38 |
| **418,681,200.00** | | **TOTAL RECURRENT REVENUE** | | **383,641,137.01** | | **348,447,856.74** |
| 36,000,000.00 | 650 | Capital Grants | | 7,111,805.19 | | 27,127,344.01 |
| **36,000,000.00** | | **CAPITAL REVENUE** | | **7,111,805.19** | | **27,127,344.01** |
| **454,681,200.00** | | **TOTAL REVENUE** | | **390,752,942.20** | | **375,575,200.75** |
| | | **EXPENDITURE** | 2 | | | |
| 260,780,700.00 | 700 | Persional Emoluments | | 212,949,575.95 | | 206,780,491.18 |
| 1,725,100.00 | 710 | Travelling Expenses | | 438,230.60 | | 720,172.73 |
| 31,576,000.00 | 720 | Supplies and Requistes | | 25,988,745.27 | | 24,304,306.96 |
| 22,185,000.00 | 730 | Repairs and Maintenance | | 14,415,042.29 | | 21,470,604.29 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11,447,200.00 | 740 | Administrative Expenses | 8,171,315.62 | 13,417,888.65 |
| 1,500,100.00 | 750 | Miscelenious Payment | 1,167,103.51 | - |
| 350,000.00 | 760 | Miscelenious Payment | 210,000.00 | 1,003,080.00 |
| 2,000,000.00 | 770 | Insurance & License Payments | 1,349,809.64 | |
| 1,716,800.00 | 780 | Welfare Payments | 1,302,935.00 | 3,369,704.12 |
| **333,280,900.00** | | **TOTAL RECURRENT EXPENDITURE** | **265,992,757.88** | **271,066,247.93** |
| 124,400,000.00 | | Equipment Outlay,Land Improvement & Structural Outlay | 88,910,376.08 | 69,975,087.04 |
| **124,400,000.00** | | **TOTAL CAPITAL EXPENDITURE** | **88,910,376.08** | **69,975,087.04** |
| **457,680,900.00** | | **TOTAL EXPENDITURE** | **354,903,133.96** | **341,041,334.97** |
| | | **EXCESS OF TOTAL REVENUE OVER TOTAL EXPENDITURE** | **35,849,808.24** | **34,533,865.78** |

### 3.3 காசுப்பாய்ச்சல் கூற்று:

## Cash Flow Statement - as at 31.12.2020

| | Current Year 2020 | Previous Year 2019 |
|---|---|---|
| **Cash Flow from Operating Activities** | | |
| **Receipts** | | |
| Taxation | 33,194,992.31 | 31,919,603.94 |
| Sales of goods and Services | 15,778,965.63 | 16,987,404.51 |
| Grants | 186,034,839.83 | 190,221,215.38 |
| Other Receipts | 177,926,914.09 | 175,850,804.38 |
| Total Cash Provided from Operations (a) | **412,935,711.86** | **414,979,028.21** |
| **Payments** | | |
| Employee Cost | 212,949,575.95 | 206,409,773.38 |
| Superannuation | 1,302,935.00 | 3,369,704.12 |
| Suppliers | 40,403,787.56 | 44,094,314.81 |
| Interest Paid | | - |
| Other Payment | 176,635,657.55 | 194,318,193.19 |
| **Total Cash Disbursed to Operations (b)** | **431,291,956.06** | **448,191,985.50** |
| **Net Cash Flows from Operational Activities [c= (a-b)]** | **(18,356,244.20)** | **(33,212,957.29)** |
| **Cash Flow from Investment Activities** | | |
| **Receipts** | | |
| Sales of goods Motor Vehicle | - | - |
| Capital Grant | 3,000,000.00 | |
| Iterest Received | 42,551,982.37 | 39,980,519.16 |
| **Total Cash Provided from Investment Activities (d)** | **45,551,982.37** | **39,980,519.16** |
| **Payments** | | |
| Purchase of Plant and Equipment | 1,841,200.00 | 1,927,341.99 |
| Motor Vehicle | 4,000,000.00 | 14,008,572.00 |
| Purchase of Books | 31,830.00 | 214,662.50 |
| Furniture & Fitting | 1,720,988.50 | 1,743,250.49 |
| Account Investment (Fixed Deposit & Savings) | 7,594,018.50 | - |
| **Net Cash Flow from Investment Activities ( e )** | **15,188,037.00** | **17,893,826.98** |
| **Net Cash Flow Investment Activities Activities [f= (d+e)]** | **30,363,945.37** | **22,086,692.18** |
| **Cash Flow from Financing Activities** | | |
| Proceeds from borrowing | - | - |
| Payment borrowing | - | - |
| Distribution/Dividend | - | - |
| **Net Cash Flow from Financing Activities (g)** | - | - |

| | | |
|---|---|---|
| **Net Increase/Decrease in Cash and Cash Equivalents[h=(c+f+g)** | **12,007,701.17** | **(11,126,265.11)** |
| Cash and Cash Equivalents at Beginning of Period(01.01.2020) | 167,126,997.33 | 178,253,262.44 |
| Cash and Cash Equivalents at end of Period(31.12.2020) | **179,134,698.50** | **167,126,997.33** |

## *3.4. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை*

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. ENP/BT/B/MCB/05/19/01 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2020 ஜூலை 15 |

மாநகர முதல்வர் உள்ளடங்கலாக அனைத்து உறுப்பினர்கள்
மாநகர சபை
மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(**1**) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1. பாதகமான அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 219 ஆம் பிரிவு சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான மட்டக்களப்பு மாநகர சபையின் நிதி நிலமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலமையொன்றினை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.



අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) சபையின் நிதிக்கூற்றுக்களானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் அரச துறைக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக காசு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதி அறிக்கை சமர்ப்பித்தல் கொள்கையில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் (SLPSAS)-1 பந்திகள் 08 மற்றும் 10 என்பவற்றிற்கு ஒத்திசைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரித்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் காசாகப் பெற்ற வருமானங்களுக்கு காசு அடிப்படை கணக்கியலும், பெறவேண்டியதாக மதிப்பிட்ட வருமானங்கள் மற்றும் செலவுகள் என்பவற்றிற்கு அட்டுறு அடிப்படை கணக்கியலும் பின்பற்றப்பட்டிருந்தமையானது வேறுபட்ட இரு கணக்கியல் கொள்கைகள் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட எவ்வெவ் விடயங்களுக்கு காசு அடிப்படை கணக்கியலும் எவ்எவ்விடயங்களுக்கு அட்டுறு அடிப்படை கணக்கியலும் பின்பற்றப்பட்டதாக நிதி அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிகழத்தக்க பொறுப்புகள்

2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மாநகர சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த 08 வழக்குகள் மற்றும் வெளித்தரப்பினரால் மாநகர சபைக்கு எதிராக தொடரப்பட்டிருந்த 08 வழக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதிவரை செலுத்தப்பட்டவேண்டிய தொகைகள் மற்றும் வெளித்தரப்பினர்களிடமிருந்து அறவிடவேண்டிய தொகைகள் கணக்கிடப்பட்டு நிகழத்தக்க பொறுப்பாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறவேண்டிய கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள வீத வரிகள், கடையறை மற்றும் ஏனைய வருமானங்கள் கூட்டு மொத்த ரூபா 23,527,737 தொகைகள் காணப்பட்ட போதிலும், இந்நிலுவைத் தொகையில் 75% சதவீதமானவை தொடர்ச்சியாக பத்து ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும், அவை தொடர்பான ஆவணங்கள், பதிவேடு மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவுமின்றி கணக்குகளில் காட்டப்பட்டு வருவதுடன் நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள வீத வரிகள் ரூபா 22,400,999 தொகையானது ஆதன உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுத்தகழிவுத் தொகையை சீராக்காத தொகையாகும். இதனடிப்படையில் நிலுவையாக காட்டப்பட்ட தொகை உண்மையான தொகையை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) கணக்கீட்டுக் குறைபாடுகள்
---------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(1) சபையின் வருமானங்களானது குறித்த நிதியாண்டுக்கு பாதீடு செய்யப்பட்ட தொகையில் அறவீடு செய்யப்பட்டவை தவிர்ந்த மீதித்தொகை பெறவேண்டிய நிலுவைகளாக நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த போதும் இத்தொகை வருட இறுதியில் உண்மையாக பெற வேண்டிய தொகைகளை (உண்டியல் தொகை) கணப்பீடு செய்து கணக்கிற்கு கொண்டுவராததின் காரணமாக நிதிக்கூற்றில் பெறவேண்டிய வருமானமாக காட்டப்பட்டிருந்த ரூபா 42,086,121 தொகையினை கணக்காய்வில் உறுதி செய்ய முடியாமல் உள்ளது.

(2) வங்கியில் நேரடியாக வைப்பு செய்த அடையாளம் காணப்படாத ரூபா 13,441,502 தொகை காசேட்டில் சீராக்கம் செய்து கணக்கீடு செய்யாமை காரணமாக நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருந்த காசு மீதி மேற்படி தொகையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(3) பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS)-1 102(e)க்கு அமைவாக சபையின் நடைமுறை ஆண்டுக்கான மிகை / குறையினை இணங்காண்பதற்காக தயாரிக்கப்படும் வருமான கூற்றில் சபையின் செலவுகளை விஞ்சிய மிகை ரூபா 77,381,609 தொகை குறித்த நிரையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(4) சபையின் மூலதன பெறுகை உட்பட அனைத்து பெறுகைகளிலிருந்து மூலதனச் செலவுகள் உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் கழித்த பின்னரான மிகை ரூபா 34,533,866 தொகை ஆக காணப்பட்ட போதிலும், திரண்டநிதி கணக்கிற்கு ரூபா 56,114,285 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக ரூபா 21,580,419 தொகை உரிய வருமான தலைப்புகளுக்கு வருமான மிகையாக அறிக்கையிடப்படாது திரண்டநிதி மற்றும் மூலதன ஒதுக்கங்களுக்காக சேர்க்கப்பட்டிருந்தது.

(5) சபைக்கு உரித்தான அசையா சொத்துக்களான காணிகள், கட்டிடங்கள் என்பவற்றிற்கு சபை பல்வேறு விதமான செலவுகளை செய்து வருடாந்தம் வருமானத்தை உழைக்கின்ற போதிலும், அச்சொத்துக்களின் திரண்ட பெறுமதியானது நிதிக்கூற்றுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(6) இயந்திரங்கள், வாகனங்கள், தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் நூலக புத்தகங்கள் என்பவற்றின் திரண்ட கிரயப்பெறுமதியாக ரூபா 261,784,806 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட போதிலும், அவற்றிலிருந்து காலத்திற்கு காலம் ஏல விற்பனை மூலம் அகற்றல் செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயப்பெறுமதி இத்தொகையிலிருந்து அகற்றி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(7) மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டி ரூபா 38,560,944 தொகையாக காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் நிலையான வைப்பு வட்டியாக ரூபா 38,417,631 தொகை மாத்திரமே கணக்குகளில் காட்டப்பட்டிருந்தமையால் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 143,313 இனால் நிதிக்கூற்றுக்களில் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(8) சபையினால் மீளாய்வாண்டு காலத்தில் ரூபா 1,562,888 வட்டித்தொகை மாத்திரமே காசாக பெறப்பட்டிருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 39,980,519 தொகை காசாக வட்டி பெறப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக முதலீடு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் ரூபா 38,417,631 தொகையினால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(09) சபையினால் மீளாய்வாண்டில் ரூபா 14,008,572 தொகை பெறுமதியான இரண்டு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அத்தொகை 2019 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய தொகையாக அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அத்தொகை காசாக வெளிச்சென்றதாக காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக இத்தொகையினால் முதலீடு நடவடிக்கைகளிலிருந்தான காசு வெளிப்பாய்ச்சல் அதிகமாக காட்டப்பட்டுள்ளது.

(10) ரூபா 10,435,141 தொகை பெறுமதியான குறித்தொதுக்கப்பட்ட நோக்க மூலதன மானியம் (CBG) அடிப்படையில் கிழக்கு மாகாண சபையால் வழங்கப்பட்ட நிதி குறித்த நோக்கத்தினை நிறைவு செய்யாது 04 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்பிலிட்டமையினால் எவ்வித உழைப்புமின்றி காணப்படுவதுடன் அதன் நோக்கத்தினையும் அடைய நடவடிக்கை எடுக்கப்படாதுள்ளது.

(11) பொது வழங்கல் கடன் கொடுனர்களுக்கான சென்மதியாக ரூபா 28,808,921 தொகை தொடர்ச்சியாக 05 ஆண்டுகளுக்கு மேலாக நிதியறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், குறித்த வழங்குனர்கள் தொடர்பான தனிப்பட்ட விபரங்கள் எதுவும் சபையில் காணப்படவில்லை. இதன் காரணமாக இம் மீதியினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(12) சபையினால் பல்வேறு கட்டுமான வேலைகள் வேலைப்படையை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், சபையின் முற்பண களஞ்சிய கணக்கு முறைமை பேணப்பட்டிருக்கவில்லை. எனினும், 2018 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொணரப்பட்ட களஞ்சிய இருப்பு மீதி ரூபா 57,413,793 தொகை காணப்படுகின்ற போதிலும், இத்தொகைக்கு ஈடான களஞ்சிய பொருள் விபரங்கள் சபையில் காணப்படவில்லை இதன் காரணமாக இத்தொகையினை உறுதிப்படுத்த முடியாதிருக்கின்றது.

(13) கொடுத்து தீர்க்க வேண்டிய கடப்பாடு ஒன்று தோன்றும் முன்பே பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வேலைகளுக்கான தொகையானது, செலவாகவும் சென்மதியாகவும் அடையாளங்காணும் கணக்கீட்டு நடைமுறையொன்று சபையில் காணப்படுகின்றமை காரணமாக மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் சென்மதிகளாக இனங்காணப்பட்ட தொகைகளை கொடுத்து தீர்ப்பதில் ஏற்பட்ட மிகைகள் மற்றும் கைவிடப்பட்ட வேலைகளுக்கான மிகைகள் என்பவற்றின் திரண்ட தொகை ரூபா 11,460,758 தொகை மீளாய்வாண்டில் திரட்டு நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. கடந்த நிதியாண்டுகளில் செலவுகளாகவும் சென்மதிகளாகவும் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்த இச் சென்மதி தொகைகளை பதிவழிப்பதற்கான உரிய அதிகாரம் எதுவும் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை.

(14) இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் 1994 மற்றும் 2018 ஆம் ஆண்டின் நிதி அறிக்கையிடலுக்கான கோட்பாட்டு வேலைச் சட்டகத்திற்கேற்ப, கடன் கொடுநர் என்பது கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்போது எழுந்துள்ள நிகழ்கால கடப்பாட்டை தீர்ப்பதற்கு பெறுமதியில் அளவிட்டு கூறக்கூடியதாக உள்ள ஒரு பொறுப்பாகும். எனினும், சபையானது பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும் வேலை ஒன்று இடம்பெறாவிடினும், அக்குறித்த வாக்குபண ஏற்பாட்டு தொகையை வருமான கூற்றில் செலவாகவும், நிதிநிலைமைக்கூற்றில் சென்மதியாகவும் கணக்கீடு செய்யும் நடைமுறை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இது மேற்படி ஒழுங்குப்படுத்தல் சட்டகத்திற்கு முரணானதாகும். மீளாய்வாண்டில் எவ்வித வேலை/ வழங்கல்/ சேவை/ பண்டம் ஒன்று பெற்றுக்கொள்ளாது அது தொடர்பில் கொடுத்து தீர்ப்பதற்கான எவ்வித கடப்பாடும் இல்லாத போதிலும், சென்மதிகளாக

ரூபா 31,986,900 தொகை பெறுமதியான 12 நிகழ்வுகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் இவற்றில் ரூபா 16,281,020 தொகை இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எவ்வித கொடுத்து தீர்க்க வேண்டிய கடப்பாடும் இன்றி சென்மதிகளாக முன்கொணரப்பட்ட மீதிகளாக காணப்பட்டன.

(15) மீளாய்வாண்டிற்கான வருமான கூற்றில் மிகையாக ரூபா 34,533,866 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், திரண்ட நிதி கணக்கில் ஆண்டுக்கான வருமான மிகையாக ரூபா 44,618,527 தொகை முன் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(16) Double cab வாகனம் மற்றும் பஸ்வண்டி என்பவற்றின் கொள்வனவு கிரயம் ரூபா 14,008,572 சபை நிதியை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்படுவதாக மூல ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்ற போதிலும், இத்தொகை மூலதன செலவீட்டிற்கான அறசிறை உதவி தொகைக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(17) மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவி தொகை எனும் தலைப்பில் பேரேட்டு கணக்கு நிதிநிலைமை கூற்றில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 278,802,901 தொகை காட்டப்படுகின்ற போதிலும், அக்கணக்கில் அரசினால் உதவியளிக்கப்படும் தொகை செலவு வைக்கப்படுவதில்லை. மாறாக சபையினால் மீளாய்வாண்டிற்கான வீதிகள், பாலங்கள், மின்விளக்குகள் போன்ற வேறு மூலதனச் செலவுகள் (Capital out lay) மற்றும் காணி, கட்டிடங்கள் என்பவற்றிற்கான மூலதனச்செலவுகள் தவிர்ந்த ஏனைய மூலதனச் செலவுகளான வாகனங்கள், பொறிகள், தளபாடங்கள் என்பவற்றிற்கான கிரயம் மாத்திரமே இக்கணக்கில் செலவு வைக்கும் கணக்கியல் நடைமுறை காணப்படுகின்றது. இதன் காரணம் இக்கணக்கில் காணப்படும் தொகை மூலதன செலவீட்டிற்கான அரசினால் வழங்கிய பங்களிப்பை பிரதிபலிக்கவில்லை.

(18) மூலதன மானியங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 27,127,344 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாடு நடவடிக்கையிலிருந்தான காசு உட்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக செயற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு மற்றும் முதலீட்டிற்கான காசு உட்பாய்ச்சல் என்பன இத்தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(19) மீளாய்வாண்டில் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களின் உதவியளிப்பில் பல்வேறு கட்டுமான வேலைகள் சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் இச் செலவுகள் நிதிக்கூற்றுக்களில் செலவுகளாக இனங்காணப்பட்டு அந்நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய ரூபா 33,410,387 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(20) சபையினால் 2019 ஆம் ஆண்டில் கைமாற்றப்பட்ட சீதனம் மற்றும் நன்கொடைகள் மூலம் உரிமை மாற்றம் செய்யப்படும் அசைவற்ற சொத்துக்களுக்கான முத்திரை தீர்வை ரூபா 50,829,200 , கிழக்கு மாகாண திறைசேரிக்கு கொடுத்து தீர்க்க வேண்டிய 1% தொகை மற்றும் மாவட்ட உதவி காணிப் பதிவாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 137,900 என்பவை உரியவாறு கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(21) 2003ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா.6,860,650 பெறுமதியான தண்ணீர் பவுசர் இயந்திரம் மற்றும் காணாமல் போன நாலு சில்லு உழவு இயந்திரத்தின் பெறுமதி கணிக்கப்படாது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக சொத்தாகக் கொண்டுவரப்படுகின்றது.

(22) 2018ஆம் ஆண்டு GIZ நிறுவனத்தால் நன்கொடையாக மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்ற 6.125Kw சூரிய மின்கல பிறப்பாக்கியின் பெறுமதி ரூபா 05 மில்லியன் சொத்தாக நிதிக்கூற்றுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(23) மீளாய்வாண்டில் வீதி நிர்மாணத்திற்காக ரூபா. 42,632,497 தொகைக்கு 3230$m^3$ Ready Mix Concreat உம், ரூபா. 12,603,294 தொகைக்கு 1738 $m^3$ ABC (Aggregate Base Course) மற்றும் ரூபா. 25,353,479 தொகைக்கு ஏனைய பொருட்களும் (கம்பி, சீமெந்து, கல்,தார், பொலித்தீன்) கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் பயன்படுத்தப்படாத மூலப் பொருட்களின் பெறுமதி ஆண்டிறுதியில் நிதிக்கூற்றுக்கு கொண்டுவரப்படவில்லை.

(24) நூல் நிலையங்களில் வாசகர்களால் வைப்பிடப்பட்ட தொகை சரியாக கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்கு கொண்டுவரப்படவில்லை.

(25) கேள்வி வைப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(26) பெரும் தொகையான இயந்திர உபகரணங்கள் சபைக்கு உரித்தான போதிலும் அவற்றின் சந்தைப் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்படவில்லை.

(27) காணாமல் போன, பழுதடைந்த நூல் நிலைய புத்தகங்கள் இறுதி இருப்பில் இருந்து கழிக்கப்படாது தொடர்ந்தும் சொத்தாகவே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

(28) ஆயுள்வேத வைத்தியசாலையின் மருந்துவகைகளின் இருப்புக்கள் கணிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(29) 2018ம் ஆண்டில் 16 மில்லியன் பெறுமதிக்கு குப்பை கூழங்கள் அழிக்கும் இயங்திரம் கொள்வனவு செய்யப்பட்ட கார்பேஜ் கொம்டக்டர்க்கு காசாக செலுத்திய தொகை ரூபா 12 மில்லியனுக்கு சமமான தொகையே சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மேலும் 2019 ஆம் ஆண்டில் இது தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 04 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இத்தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் வெளிச்சென்ற முதலீட்டு காசுப் பாய்ச்சலாக காட்டப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் எனது கணக்காய்வினை மேற்கொண்டேன் இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு இயலக்கூடியவாறு தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்பட வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளது என நியாயமான உறுதியொன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயரிய மட்டத்திலான சான்றுப்படுத்தலான போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எச்சந்தர்ப்பத்திலும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டவை என்பதற்கான சான்றுப்படுத்தல் அல்ல. மோசடி மற்றும் தவறுகளின் தனிப்பட்ட அல்லது கூட்டு மொத்தமான தாக்கத்தின் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடும் என்பதுடன், இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதன் பாவனையாளர்களால் பொருளாதார தீர்மானங்களை எடுக்கும் போது அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

என்னால் உயர் தொழில் தீர்ப்புக்கள் மற்றும் உயர்தொழில் ஐயப்பாட்டுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் அச்சுறுத்தலை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படும் அபாயத்தினை தவிர்ப்பதற்கு, போதியளவான மற்றும் பொருண்மையான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடியினால் ஏற்படும் தாக்கமானது பாரதூரமானது என்பதுடன், கூட்டுச்சதி, போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே விடுவித்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை புறக்கணித்தல் ஆகியன மோசடி நேர்வதற்கான காரணங்களாகும்.
- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக மாநகர சபையின் உள்ளகக்கட்டுப்பாடு கவனத்திற் கொள்ளப்படுகின்ற போதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் மீதான அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தப்பாடுடைய மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பிடல்,

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கியுள்ளது என்பது.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்தியங்கவில்லை என்பதுடன்

(ஆ) முன்னைய வருடத்துக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் பரிந்துரைக்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு 1.2.2 | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை |
|---|---|---|
| I. | மாநகர சபையின் கணக்குகள் அட்டுறு அடிப்படையில் செய்யப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டில் அறவிடப்படவேண்டிய முத்திரை தீர்வைத் தொகை கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | அறவிடப்படவேண்டியவை தொடர்பில் அட்டுறு கொள்கை பின்பற்றப்படவேண்டும் |
| II. | மாநகர சபையினால் கணக்கீடப்பட்டு 2017 மற்றும் 2018 யூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் கைமாற்றப்பட்ட, சீதனம் மற்றும் நன்கொடைகள் மூலம் உரிமைமாற்றம் செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்களின் மீதான முத்திரை தீர்வைத் ரூபா 70,094,691 தொகை வருமானமாக தெரிவிக்கப்பட்ட போதிலும், கிழக்கு மாகாண திறைசேரியினால் நிர்வாக செலவுகளுக்கொன | முறையாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| | அறவிடப்பட்ட 1% சதவீதமான ரூபா 700,947 தொகை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உதவி காணிப் பதிவாளர் நாயகத்திற்கு செலுத்திய ரூபா 249,600 தொகை என்பவை செலுத்தப்பட்டதாக மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | |
| III. | மாநகர சபையினால் மீளாய்வாண்டின் ஏப்பிரல் தொடக்கம் யூன் இறுதிவரை மாகாண திறைசேரி திணைக்களத்திடமிருந்து ஆதனங்களை கைமாற்றல், சீதனம் மற்றும் நன்கொடைகள் மீது அறவிடப்படவேண்டிய முத்திரை தீர்வையானது ரூபா 12,363,900 தொகையாக கணிக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்களில் நிலுவை முத்திரை தீர்வை காட்டப்பட்டதினால் மீளாய்வாண்டில் இத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | முறையாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் |
| IV. | மீளாய்வாண்டில் அறவிடப்படவேண்டிய ரூபா 55,469,852 வீதவரிகளில் ரூபா 38,689,131 தொகை அறவிடப்பட்டபோதிலும், அவ்வறவிட்டின் மீதான வரியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட கழிவுத் ரூபா 1,510,960 தொகை கணக்குகளில் கொடுத்தகழிவாக காட்டப்பட்டிருக்கவில்லை. | துல்லியமாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும் |
| V. | மீளாய்வாண்டிற்கான பட்டியலிடப்பட்ட வீதவரிகளின் மதிப்பிட்டுப் பெறுமதி ரூபா 30,667,275 தொகையாக கணிப்பிடப்பட்ட போதிலும், கணக்குகளில் ரூபா 30,000,000 தொகையாக காட்டப்பட்டதினால் மீளாய்வாண்டிற்கான நிலுவை வீதவரிகளின் பெறுமதி ரூபா 667,275 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | அனுமதிகள் பெற்றுக்கொள்ளும் வரை முறையாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் |

## 1.6 ஆவணச்சான்றுகள் இன்மை

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி ரூபா | சான்றுகளின்மை |
|---|---|---|
| பொறி இயந்திரம் | 31,902,432 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 199,716,969 | |
| களஞ்சிய பொருட்களின் இருப்புக்கள் | 51,413,793 | இருப்புப் பதிவேடுகள், விபரப்பட்டியல் |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 21,312,097 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 37,487,048 | செலுத்தவேண்டிய கடன் பதிவேடு மற்றும் கொடுப்பனவு உறுதிச் சிட்டைகள் |

### 1.6.1 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) மாநகர சபை கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 252) | | |
| (i) பிரிவு 190 | | கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் வருடாந்தம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு பிரசுரிக்கப்படுவதில்லை. |
| (ii) பிரிவு 218 | | வருடாந்த இறுதிக் கணக்கறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படாமல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின நிதிப்பிரமாணம் 571 | 3,7211,196 | மீளாய்வாண்டு இறுதிவரை பல்வேறுபட்ட தேவைகளுக்கு வைப்பிலிடப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுவரும் இவ் வைப்புக்களை கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அரச நிதிப் பிரமாணம் 1645 | | வாகன ஓட்ட பதிவேடு (பொது 268) மற்றும் மாதாந்த பொழிப்பு மாதாந்தம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையில் காணப்படும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்களுக்கான வாகன ஓட்ட அட்டவணை, பொழிப்பு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படுவதில்லை. |
| (இ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டி 2.11.1 (இ) பிரிவு | | பொருட்கள் மற்றும் சேவைகள் நடைமுறையில் பெறுகைக்கால அட்டவணை, பெறுகை முறை மற்றும் விலைக்கேள்வி ஆவணத்தின் வகை என்பன பற்றி உடன்படுவதற்குப் பெறுகைக் குழுவுடனும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுடனும் கூட்டாக முன்னாயத்தக் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். எனினும், நான்கு உழவு இயந்திரங்கள், இரண்டு காவேஜ் கொம்பக்டர்கள் மற்றும் மினி எக்ஸவேற்றர் ஆகியவற்றின் கொள்வனவின் போது அக்கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) ஏனைய சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| (i) நிதி அமைச்சின் 2018 ஜுலை 16ஆம் திகதிய வரவு செலவுத்திட்ட சுற்று நிருப இல 03/2018 இன் பிரிவு 3,4,5 மற்றும் தலைமைச் செயலாளர், செயலக 2019 ஒக்டோபர் 18ஆம் திகதிய கிழக்கு மாகாண திறைசேறி சுற்றறிக்கை இல PT/09/2019 | 14,088,572 | பொது திறைசேரியின் அங்கீகாரத்துடன் உரிய அமைச்சின் அல்லது மாகாண சபைகளின் மூலம் நேரடியாகக் கொள்வனவு செய்ய முடியுமென தெரிவிக்கப்பட்டபோதிலும், 2019ம் ஆண்டில் Double cab வாகனம் மற்றும் பஸ்வண்டி ஆகியன நிதி ஏற்பாடுகளின் கிடைப்பனவினைக் கருத்திற் கொண்டு குறித்த அங்கீகாரம் பெறப்படாது மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) நிதி பொருளாதாரம் மற்றும் கொள்ளை அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 04 ஆம் திகதிய வரவு செலவு திட்ட சுற்று நிருப இல 07/2019 இன் பிரிவு 04 | | சபையினால் 2019ஆம் ஆண்டின் திசெம்பர் முன் இரு வாரங்களில் மேற்படி வாகன கொள்வனவு நடைமுறைகளை மேற்கொண்ட போதிலும் இச் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகன கொள்வனவை நிறுத்துவதற்கு எவ்விதநடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) கிழக்கு மாகாணத் திறைசேரியின் 2015 ஏப்பிரல் 08 திகதிய சுற்றறிக்கை இல. PT/01/2015(1) | | முதல்வரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தொலைபேசி, கையடக்க தொலைபேசி மற்றும் இணையத்தள இணைப்பு என்பனபற்றின் 2018 ஏப்பிரல் தொடக்கம் 2019 மே மாதம் இறுதிவரையான காலப்பகுதிக்கான பாவனை மீதான கட்டணம் ரூபா. 111,216 தொகையாகும். சுற்றறிக்கைக்கு அமைவாக ரூபா. 68,120 தொகை மட்டுமே கொடுப்பனவு செய்யப்பட்ட வேண்டியிருந்தும், சபையினால் ரூபா. 102,664 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளமையால் ரூபா 34,544 தொகை சபைநிதியிலிருந்து மேலதிகமாக செய்யப்பட்டுள்ளது. |

1.6.2 வரித்தேவைப்பாடுகளுடன் இணங்காமை

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் பெறுகைகள் வழிகாட்டி 5.4.11 பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் ஒரு வழங்குனர் அல்லது ஒப்பந்தக்காரர் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கோருகின்ற போது அவரால் "வற் பற்றுச்சீட்டு" (VAT Invoice) சமர்ப்பிக்குமிடத்து அவருக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தமுடியும். மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் வெவ்வேறுபட்ட வழங்குனர்களுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும், அவ்வழங்குனர்களிடமிருந்து "வற் பற்றுச்சீட்டு" (VAT Invoice) பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செலுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பிலான விபரங்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதிசார் மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 87,466,270 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 95,843,811 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2018 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (ஒ) வீதவரியும் வரியும் | 35,500,000 | 52,280,720 | 29,879,721 | 22,400,998 | 31,500,000.00 | 58,757,243.00 | 41,232,501.00 | 17,524,742.00 |
| (ஒ)வாடகைகள் | 24,196,700 | 40,623,478 | 17,095,741 | 23,527,737 | 22,850,100.00 | 28,351,378.00 | 12,534,754.00 | 15,816,624.00 |
| (ஒ) அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 12,000,000 | 14,744,082 | 14,141,710 | 602,372 | 11,640,000.00 | 13,427,672.00 | 10,683,589.00 | 2,744,083.00 |
| (ஒ) ஏனைய வருமானம் | 12,343,901 | 15,098,828 | 14,496,356 | 602,372 | 101,405,000.00 | 4,296,569.00 | 3,678,961.00 | 617,608.00 |

2.2.2 சோலைவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் 20 வட்டாரங்களில் 48 கிராம சேவையாளர் பிரிவுகள் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் 42,477 அசைவற்ற ஆதனங்களில் மீது வீதவரி கணிப்பிடப்படாது, 38,476 அசைவற்ற ஆதனங்கள் மீது மாத்திரம் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) வீதவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு "K"படிவங்கள் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அப்படிவங்களில் அடிப்படையில் கட்டணங்களை முன்கூட்டி செலுத்தும் உரிமையாளர்களுக்கு வீதவரி மீதான கழிவு வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும், இப் படிவங்களில் சில படிவங்கள் குறித்த காலம் நிறைவேறிய பின்னரே உரிமையாளர்களுக்கு வினியோகிக்கப்படுதல் மற்றும் வினியோகிக்காமல் விடுதல் ஆகிய செயற்பாடுகளினால் வீதவரி மீதான கழிவினை உரிமையாளர்கள் இழந்துவிடவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

(இ) சபையினால் ஆதன உரிமையாளர் வீதவரிகளை உரிய காலத்திற்குள் செலுத்த தவறும்பட்சத்தில் அவர்களிடமிருந்து தண்டப்பணம் சபையினால் அறவிடப்படுகின்ற போதும் அவ்வாறு மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட தண்டப்பணம் தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்கு சமார்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாநகர சபையினால் வருடாந்தம் வீதவரி அறவிடுவதற்காக ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். எனினும் 2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆதனங்கள் மீதான மீள்மதிப்பீடு செய்யப்படுவதற்கு எவ்வித நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏனைய வருமானம்

#### 2.2.3.1 உல்லாச விடுதிகளின் வருமானம் மீதான தீர்வை

மாநகர சபை அதிகார எல்லைக்குள் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறவிடப்பட்ட உல்லாச விடுதிகள் மீதான வருமானவரி தொடர்பில் மாநகர சபை அதிகார எல்லைக்குள் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாச அபிவிருத்திச் சட்டத்திற்கமைய நடத்தப்பட்டு வருகின்ற ஒரு ஹோட்டல், உணவகம் அல்லது தங்குமிட விடுதிகள் ஆகியன அவ்நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்ற அத்தகைய ஹோட்டல், உணவகம் அல்லது தங்குமிட விடுதிகள் ஆகியவை பதிவு செய்யப்பட்ட அல்லது இலங்கை உல்லாச சபையால் அங்கிகரிக்கப்பட்ட அல்லது பரிந்துரைக்கப்பட்ட பிரிவுக்குள் காணப்படின் அவற்றுக்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247A இன் 2 ஆம் உப பிரிவுக்கமைய, பெறப்பட்ட வருமானத்தில் 1% சதவீதத்திற்கு மேற்படாத தீர்வையாக அறவிடப்படவேண்டும். கணக்காய்வு மாதிரி பரிசோதனையின் போது 2019 ஆம் ஆண்டு திசெம்பர் இறுதிவரையான காலப்பகுதியில் மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் ஹோட்டல்கள் மீதான வரி அறவிடப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதியான 2020 மே 30 ஆம் திகதிவரை அறவிடப்பட வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3.2 காணி விற்பனைத் தீர்வை

மாநகர சபை அதிகார எல்லைக்குள் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைமாற்றம் செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247E (1),(2) ஆம் உப பிரிவுகளுக்கமைய, அசைவற்ற ஆதன விற்பனைப் பெறுமதியில் 1% சதவிதம் தீர்வையாக அறவிடப்படவேண்டிய போதிலும், கணக்காய்வு மாதிரியின்படி 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் அசைவற்ற ஆதனங்கள் ரூபா 653,235,000 தொகைக்கு விற்பனை செய்யப்பட்ட காணிகள் தொடர்பில் 1% சதவிதம் தீர்வையாக ரூபா 6,532,350 தொகை அறவிட கணக்காய்வுத் திகதியான 2020 மே 30 ஆம் திகதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன்படி மீளாய்வாண்டில் அன்னளவாக ரூபா. 6 மில்லியன் தொகைக்கு மேற்பட்ட வருமானத்தை சபை இழந்து வருகின்றது.

2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

2.2.4.1 முத்திரை தீர்வை

மாநகர சபை அதிகார எல்லைக்குள் 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அசைவற்ற காணிகள் கைமாற்றல்கள் மீதான முத்திரைத் தீர்வைகள் மட்டக்களப்பு மாவட்ட காணிப் பதிவாளர் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்டு கிழக்கு மாகாண திறைசேரியின் வருமானவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வையை உள்ளூராட்சி சபைகள் பெற்றுக்கொள்வது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க முத்திரை தீர்வை மாற்றல்கள் பிரிவு 03 இற்கு அமைய வருடாந்தம் முத்திரைத் தீர்வை அறவிடப்படவேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் மாநகர சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிட கணக்காய்வுத் திகதியான 30 மே 2020 வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தால், கிழக்கு மாகாண சபைகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வரிகளையும் கட்டளைகளையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்குமான நியதிச் சட்டத்தின் 37 ஆம் சரத்துக்கமைய மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2016, 2017 மற்றும் 2018 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வை தொடர்பில் ஆதன உரிமையாளர்களால் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வை கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) முத்திரை தீர்வையானது மாநகர சபைக்கு கிடைக்கவேண்டிய வருமானமாகும். இருந்தும், 31 யூலை 2019 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையில் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தினால் மேலதிகமாக அறவிடப்பட்ட முத்திரை தீர்வை ரூபா 12,161,463 தொகை கணக்காய்வுத் திகதியான 30 மே 2020 வரை மாநகர சபைக்கு கிடைக்கப் பெறவில்லை. இதனால், மேலதிக முத்திரை தீர்வை மற்றும் காணி விற்பனை தீர்வை வருமானங்கள் வருடாவருடம் கிடைக்கப்பெறாது இழக்கப்படுகின்றன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகியவை சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உப விதிகள்

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், 34 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் இவ் முக்கியமான விடயங்களுக்கான உபவிதிகள் எதுவும் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், உப விதிகள் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் சபையினால் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டியபோதிலும், அச்செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 08 உள்ளூராட்சி மன்றங்களினால் சேகரிக்கப்படும் உக்கக்கூடிய (Compose waste) உக்காத (Land Fill) மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை (Residual Waste) சேகரித்து முகாமைத்துவம் செய்வதற்காக செங்கலடிப்பிரதேச எல்லைக்குட்பட்ட கொடுவாமடு எனும் இடத்தில் சுமார் ரூபா 425 மில்லியன் செலவில் 60 ஏக்கர் நிலப்பரப்பில் அதிநவீன முறையில் (Engineered Land Fill) நிலையமொன்றை திட்டங்கள் சேவைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் (United National For Project Service (UNOPS)) அமைத்து மாநகரசபை ஆணையாளர் உட்பட மற்றும் 07 உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களையும் இணைத்து, கிழக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளர், மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முன்நிலையில் கிழக்குமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் ஒத்தாசையுடன் குறிப்பிடப்பட்ட 08 உள்ளூராட்சி மன்றங்களினால் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளினால், மட்டக்களப்பு மாவட்டம் மாசடைவதைத் தடுக்கும் நோக்குடன் 21 மார்ச் 2017 இல் UNOPS நிறுவனத்தினால் ஒப்பந்தம் (Land Fill

use Agreement) ஒன்று நிறைவேற்றப்பட்டது. இது சம்பந்தமாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) மட்டக்களப்பு மாநகரசபை தவிர ஏனைய 07 உள்ளூராட்சி மன்றங்களும் ஒப்பந்த நிபந்தனைப்படி திண்மக்கழிவுகளை (Residual Waste, Land Fill) கொடுவாமடுவில் சேகரித்து சூழல் மாசடைவதை தடுத்துள்ளது. ஏப்ரல் 2017 தொடக்கம் டிசம்பர் 2020 வரையான 45 மாதங்களுக்கான கொடுவாமடுவில் சேகரிக்கப்பட்ட திண்மக்கழிவு விபரம் வருமாறு.

| உள்ளூராட்சி சபைகள் | | 2017 (தொன்) | 2018 (தொன்) | 2019 (தொன்) | 2020 (தொன்) |
|---|---|---|---|---|---|
| மாநகரசபை | மட்டக்களப்பு | 1 | - | - | - |
| நகரசபை | காத்தான்குடி | 5662 | 904 | 4463 | 1405 |
| நகரசபை | ஏறாவூர் | 1369 | 3184 | 3794 | 415 |
| பிரதேசசபை | களுதாவளை | 375 | 308 | 512 | 222 |
| பிரதேசசபை | ஆரையம்பதி | 224 | 01 | - | - |
| பிரதேசசபை | செங்கலடி | 1967 | 1146 | 2143 | 310 |
| பிரதேசசபை | வாழைச்சேனை | 141 | 133 | - | - |
| பிரதேசசபை | ஓட்டமாவடி | 16 | 121 | - | 144 |
| **மொத்த தொன்** | | **9755** | **5797** | **10912** | **2496** |

(ii) மட்டக்களப்பு மாநகர சபையை விட மிக தூரமான இடங்களில் இருந்தும், வருமானம் குறைந்த நகர சபைகளும், பிரதேச சபைகளும், கொடுவாமடுவிற்கு திண்மக்கழிவுகளை அனுப்பி சூழல் மாசடைவதில் இருந்து தங்கள் பகுதி உள்ளூராட்சி எல்லைகளை பாதுகாக்கும் அதே வேளை மாநகர சபை மட்டும் எதுவித கழிவுகளையும் அனுப்பாதுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(iii) மட்டக்களப்பு மாநகர சபையினால் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகள் ஒப்பந்த நிபந்தனைப்படி கொடுவாமடுவிற்கு அனுப்பப்படாததினால் ஏனைய 07 உள்ளூராட்சி மன்றங்களினால் கொடுவாமடுவில் சேகரிக்கப்படும் திண்மக்கழிவு ஒரு தொன்னுக்கான பராமரிப்பு செலவு கட்டணம் ரூபா 630 இல் இருந்து ரூபா 1,925 வரை அதிகரித்துள்ளது. மொத்த பராமரிப்பு செலவினை சேகரிக்கப்படும் கழிவுத் தொன்களினால் பிரிப்பதனால் ஒரு தொன் கழிவிற்கான கட்டணம் தீர்மானிக்கப்படுகின்றது. ஏப்ரல் 2017 தொடக்கம் டிசம்பர் 2018 வரை கொடுவாமடு திண்மக்கழிவு முகாமைத்துவ

நிலையத்தினால் பிரதேச சபைகளினால் கொட்டப்படும் கழிவு ஒரு தொன்னுக்கான கட்டண விபரம் சில வருமாறு.

| ஆண்டு | மாதம் | அறவிடப்பட்ட கட்டணம் ரூபா |
|---|---|---|
| 2017 | ஏப்ரல் | 630 |
| 2018 | ஜனவரி | 1,871 |
| 2018 | மார்ச் | 1,635 |
| 2018 | ஓகஸ்ட் | 1,926 |
| 2018 | நவம்பர் | 672 |
| 2018 | டிசம்பர் | 1,243 |

(iv) 1980 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க சூழல் பாதுகாப்புச் சட்ட 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் படி 1533 ஆம் இலக்க 25 ஜனவரி 2008 ஆம் திகதியிட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் பகுதி A இன் பிரிவு (57),(60),(61),(62) இன் படி மாநகர சபை இத்திண்மக் கழிவு நிலையத்தையும், இதன் செயற்பாட்டையும் முன்னெடுப்பதற்கான உரிய அனுமதியினை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

(v) இந்நிலையம் முறையாக கையாளப்படாததினால் நிலத்தடி நீர் (Under Ground Water) பழுதடைந்துள்ளது. வளிமண்டலம் மாசடைந்துள்ளது (Air) நிலம் (Land) மட்டக்களப்பு வாவி (Lake) மாசடைந்துள்ளதென மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிக்கையிட்டுள்ளது.

(vi) இவ் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள சுமார் 08 ஏக்கர் காணி, மண்முனை வடக்கு பிரதேச செயலாளரினால் மாநகர சபைக்கு உரிய முறையில் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) சேகரிக்கப்படும் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படும் சேதனப்பசளை அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப தரத்தினையுடையதாக காணப்படாததுடன் 2018 ஆம் ஆண்டில் மாதாந்தம் ரூபா 40,000 இற்கும் குறைவான தொகையையே வருமானமாக பெற்றிருந்தது. இது ஏனைய

பிரதேச சபைகளால் உழைக்கப்படும் வருமானத்துடன் ஒப்பிடும் போது குறைந்த வருமானமாகவே காணப்படுகின்றது.

(viii) மீள் பயன்பாட்டிற்குரிய பொருட்களை விற்பனை செய்வதின் மூலம் மாதாந்தம் சராசரியாக ரூபா 70,000 இற்கும் குறைவான வருமானமே பெறப்படுகின்றது. சேகரிக்கப்படும் கழிவுகளுடன் இதனை ஒப்பிடும் போது இது மிகக்குறைந்த வருமானமாகவே காணப்படுகின்றது.

(ix) வேலையாட்கள் சம்பளம், மின்சாரம், எரிபொருள், நீர் விநியோகம், ரோலர் இயந்திரம் போன்றவற்றிற்காக மாதாந்தம் சராசரியாக ரூபா 650,000 இற்கு மேல் செலவாகின்றது.

(x) கிழக்குப் பல்கலைக்கழக ஆராய்ச்சி குறிப்பு அறிக்கையொன்றில் இப்பிரதேசத்தில் உள்ள நிலத்திற்கு அடியிலான நீரின் PH பெறுமானம் மாற்றமடைந்துள்ளதாகவும் நீர் மாசடைந்துள்ளதாகவும் இதனை குடிப்பதற்கோ ஏனைய வீட்டுத் தேவைக்கோ பயன்படுத்த வேண்டாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(xi) சட்டமா அதிபர் திணைக்களம் 2017 நவம்பர் 21 ஆந் திகதிய அறிக்கையில் இதன் தாக்கத்தை உணர்ந்து 15 கற்பிணி தாய்மார்களையும், சிறுவர்களையும் வேறு இடத்திற்குக் கட்டாயமாக மாற்றுமாறு மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டுள்ளனர்.

(xii) திருப்பெருந்துறையில் திண்மக்கழிவு முகாமைத்துவத்தை சிறந்த முறையில் சூழலுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் முன்னெடுத்துச் செல்ல 2016 ஆம் ஆண்டு ரூபா 616,090 காசுத் தொகையும் 2018 இல் ரூபா 50 மில்லியன் பெறுமதியான ஒரு Land Cruiser KE-8130 இலக்க வாகனமும் UNOPS நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதுடன் இந்நிதி இந் நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது ரூபா 541,090 வைப்புக் கணக்கிலிடப்பட்டுள்ளது. செலவிடப்பட்ட ரூபா 75,000 வேறு நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

(xiii) கொட்டப்படும் கழிவுகளை மூடுவதற்காக ஓகஸ்ட் 2017 இல் இருந்து நவம்பர் 2018 வரை மொத்தம் 1983 கியூப் மணல் ரூபா 285 தொடக்கம் ரூபா 2,300 வரை கொடுத்து மொத்தமாக ரூபா 3.1 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

(xiv) திராய்மடு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 5 ஏக்கர் நிலம் திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக மாநகர சபைக்கு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

நகரமயமாக்கல் (Urbanization) திட்டங்களுக்கு முரணாக நகரத்தின் மத்தியில் இந்நிலையம் சுகாதாரத்திற்கு கேடு விளைவிப்பதுடன், சூழலும் மாசடைந்து கெட்ட துர்நாற்றம் வீசுவதும் கொட்டப்படும் கழிவுகள் நிலமட்டத்தில் இருந்து சுமார் 8 அடி உயரம் வரை உயர்ந்துள்ளது. மேலும், சுமார் 25 அடி ஆழமும், 100 அடி விட்டமும் உள்ள ஒரு பாரிய குழி காணப்படுகின்றது. இக்குழியில் சேகரிக்கப்படும் கழிவுகளில் இருந்து வடியும் திரவம் அங்கீகரிக்கப்பட்ட சுத்திகரிப்பு முறைகள் எதுவும் பின்பற்றப்படாது மட்டக்களப்பு வாவியில் விடப்படுகின்றது. இதனால் மட்டக்களப்பு வாவி மாசடைகின்றது என்பது எங்களால் அவதானிக்கப்பட்டது. மேலும், அண்மித்துள்ள பிரதேசத்தில் ஈக்களின் பெருக்கம் அதிகரித்துள்ளதுடன் மனித உடற்கூறுகளை உண்ணும் பெரும் கழுகுக்கூட்டமும் காகங்களும் பலநூற்றுக்கணக்கில் கழிவுப் பொருட்களை வெளியிடங்களில் தூக்கிக் கொண்டு போடுவதுடன் நாய்களும் கூட்டமாக காணப்படுகின்றது. இந்நிலையத்தை மூடிவிடுமாறும், இந்நிலையத்தினால் சூழல் மாசடைந்துள்ளதாகவும், பொது மக்கள் மாநகர சபைக்கு எதிராக 2017 ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்து விசாரணை இன்றுவரைத் தொடர்கின்றது.

இவ் ஒப்பந்தம் செய்யும் போது உள்ளூராட்சி மன்றங்களை இணைத்து ஒப்பந்தம் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும் என பணித்த பிரதான ஒரு சாரராக இருந்த முன்னாள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாரே தற்போது மாநகர சபை ஆணையாளராகவும் கடமையாற்றுகின்ற போதிலும் இவ் ஒப்பந்தத்தை சரிவர நிறைவேற்ற தவறியதுடன் சபைக்கு ஆலோசனையையும் வழிகாட்டலையும் செய்யாதுள்ளனர். மேலும் நீதி மன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ள போது ருபா 03 மில்லியன் தொகைக்கு மேல் இங்கு கட்டிடநிர்மாண வேலைகள் நடைபெற்றுள்ளது

(ஈ) சுற்றுச் சூழல் பிரச்சனை

---

சக்கர் இயந்திரத்தின் மூலம் சேகரிக்கப்படும் மனிதக்கழிவுகள் சபைக்கு சொந்தமில்லாத திருப்பெரும்துறையில் அங்கீகரிக்கப்பட்ட சுத்திகரிப்பு முறைகளுக்கு மாறாக கொட்டப்படுவதினால் மட்டக்களப்பு வாவி மாசடைகின்றது, சூழலும் மாசடைகின்றது.

(உ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைவதற்கு தவறியமை

உயிர்வாயு தயாரிப்பு மற்றும் வைத்தியசாலைக் கழிவுகளை எரியூட்டலுக்காக முறையே ரூபா 02 மில்லியன் மற்றும் ரூபா 03 மில்லியன் செலவிடப்பட்டுள்ள போதிலும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை (Out come) அடைந்து கொள்ளமுடியாதிருந்த சந்தர்ப்பங்கள்

| செயற்பாடுகள் | 2019 வரைசெலவிடப்பட்ட ரூபா | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 1. உயிர்வாயு தயாரித்தல் | 2,000,000 | 02 வருடங்களாக வாயு தயாரிக்கப்படவில்லை. |
| 2. வைத்தியசாலை கழிவுகளை எரியூட்டல் | 2,624,000 | இயங்திரம் 05 வருடங்களுக்கு மேலாக பொருத்தப்படவில்லை. |

3.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

சபையின் பொது முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இரண்டாவது சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் (2nd HSDP) நிதியளிப்பின் கீழ் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி மாநகர சபையினால் தனியார் வைத்தியசாலைகளின் கழிவுகளை எரியூட்டுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,624,800 பெறுமதியான Medical waste Incinerator உபகரணம் பொருத்தமான இடம் தெரிவு செய்யப்படாமை காரணமாக கடந்த ஆறு வருட காலமாக கணக்காய்வுத் திகதி வரை பாவனையற்று காணப்படுகின்றது.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு**

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1)ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டில் சபையில் வருடத்திற்கு நான்கு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கவேண்டியிருந்தும், சபையில் ஒரு குழுக் கூட்டம் மாத்திரமே நடைபெற்றிருந்தது.

ஈ.கே.கே.எஸ்.எதிரிசிங்க
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

# அத்தியாயம் 04 – செயற்றிறன் குறிகாட்டிகள்

## 4.1 நிறுவனத்தின் செயற்றிறன் குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

| திட்டவட்டமான குறிகாட்டிகள் | ஏதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதம் (%) ஒன்றாக உண்மை வெளியீடு | | |
|---|---|---|---|
| | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| குடியிருப்பாளர்கள், பொதுமக்களினது தேவைகளை இனங்கண்டு முன்னுரிமை அடிப்படையில் கௌரவ உறுப்பினர்கள் மூலமாக மக்கள் பங்களிப்புடன் நிறைவேற்றல். | | ✓ | |
| திட்டமிட்டு உரிய காலத்தில் உப குழுக்களினது கூட்டங்கள், மாதாந்த சபை அமர்வுகள் இடம்பெறுதல். | ✓ | | |
| கழிவுகளை வகைப்படுத்தி அவற்றை திட்டமிடப்பட்ட பொறிமுறையின் அடிப்படையில் அகற்றுதலும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தலும். | ✓ | | |
| வருடத்திற்கான பாதீட்டின் அடிப்படையில் வருமான மூலங்களை நிலுவையின்றி அறவிட நடவடிக்கை எடுத்தலும், அறவிட முடியாதவற்றை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை எடுத்தலும். | | ✓ | |
| பாதீட்டு முன்மொழிவு அபிவிருத்தி திட்டங்களை குறித்த ஆண்டிலேயே பூர்த்தி செய்தலுக்கான செயற்பாடுகளை துரிதப்படுத்தல். | | ✓ | |
| முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் கூட்டங்களை திட்டமிடப்பட்ட காலங்களிலேயே நடாத்தி முடித்தல். | ✓ | | |
| பூங்காக்கள், நூலகங்கள், பொதுச்சந்தைகளினது வருடாந்த புனரமைப்பு வேலைகளை பாதீட்டின் அடிப்படையில் உரியவாறு மேற்கொள்ளல். | | ✓ | |

## அத்தியாயம் 05 – நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDG) அடைந்து கொள்ளுதல் பற்றிய செயற்றிறன்

### 14.1 இனங்காணப்பட்ட உரிய நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்கள்.

| குறிக்கோள்/நோக்கம் | இலக்குகள் | அடைவின் குறிகாட்டிகள் | தற்போதுவரை அடைவின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| வறுமையாளர் வருமான உயர்வு, இயற்கை அழிவுப் பாதுகாப்பு | இலவச ஆயர்வேத வைத்தியசாலை நடாத்துதல் | | | | |
| | இலவச ஹோமியோபதி வைத்தியசாலை நடாத்துதல் | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

### 14.2 நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களின் அடைவுகளும் சவால்களும்

**அடைவுகள்**

**சவால்கள்**

# அத்தியாயம் 06 – மனிதவள விவரக்குறிப்பு

## 6.1 பதவியணி முகாமைத்துவம்

| விபரம் | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடங்கள் / மிகை |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 09 | 06 | 03 |
| மூன்றாம் நிலை | 02 | 02 | 00 |
| இரண்டாம் நிலை | 124 | 88 | 36 |
| கீழ் நிலை | 287 | 189 | 98 |

## 6.2 மனித வளங்களில் பற்றாக்குறை அல்லது மிகையானது எவ்வாறு நிறுவனத்தின் செயற்றிறனை பாதித்துள்ளது.

<u>மனித வளங்களின் பற்றாக்குறை</u>

மாநகரசபைக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி 05 ஆக காணப்பட்ட போதும் தற்போது மூவரே சேவையில் உள்ளனர். எனவே தொழிநுட்ப சேவையில் காணப்படும் ஆளணிப்பற்றாக்குறை காரணமாக கட்டுமான சேவைகளை திட்டமிட்ட காலப்பகுதியினுள் நிறைவேற்ற முடியாதுள்ளதுடன் அவ்வேலைகளை சிறந்த முறையில் மேற்பார்வை செய்து வேலையின் தரத்தை உறுதிப்படுத்துவதும் சவாலான விடயமாக காணப்படுவதுடன் சிலவேலைகளை தொடர்ந்து வரும் ஆண்டுகளில் பிற்போட வேண்டிய தேவைப்பாடு காரணமாக இவ்விடயம் நிறுவனத்தின் செயற்றிறனைப் பாதித்துள்ளது.

இதேபோன்று வருமான பரிசோதர்களுக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை 06ஆக காணப்பட்ட போதும் தற்போது சேவையில் ஒருவரே காணப்படுவதால் திட்டமிட்ட வருமானங்களை உரிய காலத்தில் அறவீடு செய்ய முடியாதுள்ளதுடன் பெருந்தொகையான நிதி அறவிடப்படாது வருடா வருடம் நிலுவையாக காணப்படுவதுடன் இவ்விடயம் தொடர்பில் கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் உரிய காரணிகளை விளக்கி பதிலளிக்க வேண்டியுள்ளது.

சபைக்குரிய சட்ட ஆலோசகர் இன்மையால் தகுதியானவர்களிடம் சட்ட ஆலோசனை பெறுவதற்கும் நீதிமன்றில் சபை தொடர்பான வழக்குகளில் ஆஜர்ஆகுவதற்கும் பெருந்தொகையான சபைநிதியை செலவிடவேண்டியுள்ளது. சபைக்குரிய செயலாளர் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியாக காணப்பட்ட போதும் இப்பதவிக்கு இதுவரை காலமும் ஒருர் நியமிக்கப்படாமை காரணமாக சபை செயற்பாடுகளை ஒழுங்கமைத்து மாதாந்த கூட்டங்களை முறையாக நடத்துவதற்கும் சபை ஒழுங்கு விதிகளுக்கமைய சபை விடங்களை ஒழுங்கான முறையில் முன்னெடுக்கவும் முடியாதுள்ளது.

சுகாதார நலன்சார்ந்த விடயங்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான சுகாதார பரிசோதகருக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மூன்றாக காணப்பட்ட போதும் இப்பதவிக்குரிய ஆளணி இன்மையால் ஓய்வுநிலையில் உள்ள சுகாதாரப்பரிசோதகரை ஒப்பந்த அடிப்படையில் அவரது சேவை பெறப்படுகின்றது. இதற்கமைய வரிப்பணத்திலேயே சுகாதாரப்பரிசோதகருக்கான சகல கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படுவதுடன் இவரது சேவையும் இவ்வருடத்துடன் முடிவுறுத்தப்பட்டுள்ளமையால் சுகாதார ரீதியான பல பிரச்சனைகட்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கனரக மற்றும் சாரதிகட்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 37 ஆகக் காணப்பட்டபோதும் தற்போது நிரந்தர சாரதிகளே சேவையில் உள்ளனர். எனவே சாரதிகளுக்கான பற்றாக்குறை காரணமாக அமைய அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களை சாரதிகளாக பயன்படுத்த வேண்டியுள்ளமையால்.

இயந்திர சாதனங்களையும் வாகனங்களையும் சிறந்த முறையில் பராமரிக்கமுடியாதுள்ளதுடன் அடிக்கடி அவை பழுதடைவதற்கான காரணம் தேர்ச்சி பெற்ற சாரதிகளால் கனரக வாகனங்கள் இயக்கப்படாமையே என அறிய முடிகிறது.

எனவே மேற்படி மனிதவள பற்றாக்குறை காரணமாக வீண்விரயம் மற்றும் நிறுவனத்தின் செயற்திறனையும் எதிர்கால திட்டமிடலையும் வெகுவாக பாதித்துள்ளது.

**<u>மனித வளங்களின் மிகை</u>**

மாநகரசபைக்கென அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினை விட சில ஆளணி வகுதிகளில் உள்ள எண்ணிக்கை மிகையாக காணப்படுவதனால் அலுவலக உபகரணங்களின் விரயமான உபயோகம் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு ஏற்ப திறமையான உழைப்பை பெற்றுக்கொள்ளமுடியாத அசாதாரண நிலை காணப்படுகின்றது.

## *6.3 அலுவலர் குழாத்தின் ஆற்றல் விருத்தி*

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்ற ப்பட்ட | நிகழ்ச்ச ூத் திட்டத் | மொத்த முதலீடு (மில்.ரூபா) | நிகழ்ச்சித் திட்டத்தி | வெளியீடு/ அடையப் |
|---|---|---|---|---|---|

| | அலுவலர்களின் எண்ணிக்கை | தின் கால அளவு | உள் நாடு | வெளி நாடு | ன் தன்மை | பெற்ற அறிவு |
|---|---|---|---|---|---|---|
| திட்ட முன்மொழிவுகள் எழுதுதல் | | | | | | |
| சிங்கள மொழியில் கதைத்தல் | | | | | | |
| தலைமைத்துவம் | | | | | | |
| காகிதம் இல்லாத அலுவலகம் மற்றும் தொழில்நுட்பம் - அமர்வு 1 | *2* | *2* நாள் | | | | |
| நிகழ்ச்சி முகாமைத்துவம் | *2* | *1* நாள் | | | | |
| காகிதம் இல்லாத அலுவலகம் மற்றும் தொழில்நுட்பம் - அமர்வு 2 | *2* | *1* நாள் | | | | |
| வயரிங், பிளம்பிங் தொழில்நுட்பம் | *3* | *1* நாள் | | | | |
| வரவு செலவுத்திட்ட உருவாக்கம் | *?* | *2* | | | | |
| இலங்கை ஓய்வூதியம் | *4* | *4* | | | | |
| உள்ளூராட்சி நிதி முகாமைத்துவம் (உயர்தரம்) | *2* | *3* | | | | |
| பெறுகை நடைமுறைகள் | *2* | *1* நாள் | | | | |
| இறுதிக் கணக்கறிக்கை | *3* | | | | | |
| உள்ளூராட்சி நிறுவனங்களில் பொதுமக்கள் தொடர்பாடல் | *1* | *1* | | | | |
| அலுவலக வாகனங்களின் முகாமைத்தும் மற்றும் பராமரிப்பு | | *1* | | | | |
| நேரான அணுகுமுறை மற்றும் திறன் அபிவிருத்தி | *2* | *1* நாள் | | | | |

***பயிற்சி நிகழ்ச்சித் திட்டமானது நிறுவனத்தின் செயற்றிறனுக்கு செய்த பங்களிப்பு***

## அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை

| ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலை (இணங்கியுள்ளது/ இணங்கவில்லை | இணங்காமைக்கான சுருக்கமான விளக்கம் | ஏதிர்காலத்தில் இணங்காமையினை தவிர்ப்பதற்கு பிரேரிக்கப்பட்ட சரிப்படுத்தல் நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| **1. நிதிக்கூற்றுக்களின் முன்வைப்பு** | | | |
| *1.1 மீளாய்வின் கீழான ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களானவை உரிய திகதியளவில் முன்வைக்கப்பட்டிருந்தன.* | **இணங்கியுள்ளது** | | |
| **2. கணக்காய்விற்கான பதிலறுப்பு** | | | |
| *2.1 கணக்காய்வாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளது.* | **இணங்கியுள்ளது** | | |
| *2.2 முன்னைய ஆண்டில் கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களில்/பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட சகல குறைபாடுகளும் திருத்தப்பட்டுள்ளன.* | **இணங்கியுள்ளது** | | கூடியளவு ஐயவினாக்கள் திருத்தப்பட்டுள்ளது. ஒருசில திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது |
| **3. திட்டமிடல்** | | | |
| *3.1 நிறுவனத்திற்கான வருடாந்த செயல்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.* | **இணங்கியுள்ளது** | | |

| | | | |
|---|---|---|---|
| 3.2 மீளாய்வின் கீழான ஆண்டுக்கான செயல்திட்டமானது உரிய திகதியளவில் அனுமதிக்கப்பட்டிருந்தது. | **இணங்கியுள்ளது** | | |
| 3.3 மீளாய்வின் கீழான ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் உரிய திகதியளவில் அனுமதிக்கப்பட்டிருந்தது. | **இணங்கியுள்ளது** | | |
| 3.4 வருடாந்த பெறுகைத் திட்டமானது உரிய திகதியளவில் தயாரிக்கப்பட்டிருந்தது. | **இணங்கியுள்ளது** | | |
| **4. வீதவரி நிர்வாகம்** | | | |
| 4.1 வீதவரிகள் அறவிடப்படும் ஆதனங்களானவை 05 வருடங்களுக்கு ஒருமுறை மதிப்பிடப்பட்டிருந்தன. | **இணங்கியுள்ளது** | | |
| 4.2 மீளாய்வின் கீழான ஆண்டுக்காக வசூலிக்கப்பட்ட வருமானத்திலிருந்து 70% ஆனது அதே ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது. | **இணங்கியுள்ளது** | | |
| 4.3 காலங்கடந்த வீதவரிகளை அறவிடுவதற்கு பற்றாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. | **இணங்கியுள்ளது** | | |
| **5. வாடகை நிர்வாகம்** | | | |
| 5.1 வருடாந்தம் வாடகைக்கு விடப்படும் சகல ஆதனங்களும் (அப்படிப்பட்டதாக, இறைச்சிக்கடைகள், மீன்கடைகள், பொதுச்சந்தை) மீளாய்வின் கீழான ஆண்டில் வாடகைக்கு விடப்பட்டிருந்தன. | | **இணங்கவில்லை** | கொவிட் தொற்று காரணமாக குத்தகைக்கு பெற்றுக் கொள்ளவில்லை |
| 5.2 வருடாந்தம் வாடகைக்கு விடப்பட்ட ஆதனங்கள் தொடர்பில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. | **இணங்கியுள்ளது** | | |
| 5.3 வருடாந்தம் வாடகைக்கு விடப்பட்ட ஆதனங்களிலிருந்து சகல நிலுவை வரிகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. | | **இணங்கவில்லை** | சிலர் கட்டுவதாக இணங்கியுள்ளனர். சிலருக்கு வழக்கு தாக்குதலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 5.4 காலங்கடந்த பணத்தை சேகரிப்பதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | **இணங்கியுள்ளது** | | வழக்கு தாக்குதல் செய்யப்பட்டுள்ளது. |
| 5.5 நீண்டதொரு காலப்பகுதிக்கு வாடகைக்கு விடுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட சகல ஆதனங்களும் (பொதுச்சந்தை, நவீன அலங்காரப்பொருள் கடை) வாடகைக்கு விடப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |

| | | | |
|---|---|---|---|
| 5.6 நீண்டதொரு காலப்பகுதிக்கு வாடகைக்கு விடப்பட்ட ஆதனங்கள் தொடர்பில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. | **இணங்கியுள்ளது** | | |
| **6. வியாபார வரிகள் மற்றும் வர்த்தக உரிமங்களின் நிர்வாகம்** | | | |
| 6.1 மீளாய்வின் கீழான ஆண்டு சார்பில் வியாபார வரிகள் மற்றும் வர்த்தக உரிமக் கட்டணங்களைச் சேகரிப்பதற்கு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | **இணங்கியுள்ளது** | | |
| **7. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்** | | | |
| 7.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் குறைந்தது 04 கூட்டங்கள் ஆண்டுக்காலத்தில் நடாத்தப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |
| **8. வங்கிக் கணக்குகளின் முகாமைத்துவம்** | | | |
| 8.1 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, சான்றுபடுத்தப்பட்டு, உரிய திகதியளவில் கணக்காய்விற்காகத் தயார்படுத்தப்பட்டிருந்தன. | **இணங்கியுள்ளது** | | |
| 8.2 மீளாய்வின் கீழான ஆண்டில் அல்லது முன்னைய ஆண்டுகளிலிருந்து காணப்பட்டிருந்த செயலற்ற கணக்குகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. | **இணங்கியுள்ளது** | | |
| 8.3 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களினூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்த அத்துடன் சீராக்கங்கள் செய்யப்பட வேண்டியிருந்த மீதிகள் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருந்திருப்பின் அவை தொடர்பில் நிதிப்பிரமாணங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | **இணங்கியுள்ளது** | | |
| **9. சொத்து முகாமைத்துவம்** | | | |
| 9.1 சகல சொத்துக்களும் ஆவணப்படுத்தப்பட்டிருந்தன. | **இணங்கியுள்ளது** | | காணி, கட்டடங்களுக்கு மாத்திரம் பதிவேட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. |
| 9.2 சகல சொத்துக்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | **இணங்கியுள்ளது** | | |
| 9.3 சகல சொத்துக்களும் கொள்ளல் செய்யப்பட்டிருந்தன. | **இணங்கியுள்ளது** | | |
| 9.4 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைக்கு ஏற்ப பொருள் | **இணங்கியுள்ளது** | | |

| | | | |
|---|---|---|---|
| கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கைகள் உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. | | | |
| 9.5 பொருள் கணக்கெடுப்பினூடாக வெளிப்படுத்தப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் சார்ந்த அத்துடன் ஏனைய தொடர்புற்ற பரிந்துரைகள், நடவடிக்கைகள் என்பன இச்சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. | **இணங்கியுள்ளது** | | |
| 9.6 பாவிக்க முடியாதவையென்று கைவிடப்பட்ட பொருட்களின் அகற்றலானது நி.பி. 772 இற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டிருந்தது. | **இணங்கியுள்ளது** | | |
| **10. வாகனங்களின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 குறித்தொதுக்கப்படாத வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தப் பொழிப்புகளும் தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | **இணங்கியுள்ளது** | | |
| 10.2 பாவிக்க முடியாதவையென்று கைவிடப்பட்ட வாகனங்களானவை கைவிடப்பட்டு 06 மாதங்களைவிடக் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றப்பட்டிருந்தன. | | **இணங்கவில்லை** | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 10.3 வாகனப் பதிவேட்டுப் புத்தகங்கள் பேணப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டிருந்தன. | **இணங்கியுள்ளது** | | |
| 10.4 ஒவ்வொரு வாகன விபத்தும் தொடர்பில் நி.பி.103, 104, 109 மற்றும் 110 என்பவற்றுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 10.5 2016.12.29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1ம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீளப் பரிசோதிக்கப்பட்டுள்ளது. | | **இணங்கவில்லை** | |
| 10.6 வாகனப் பராமரிப்புப் பதிவேடு நிறுவனத்தில் பேணப்பட்டிருந்தது. | **இணங்கியுள்ளது** | | |

| | | | |
|---|---|---|---|
| *10.7 எரிபொருள் பதிவேடு நிறுவனத்தில் பேணப்பட்டிருந்தது.* | **இணங்கியுள்ளது** | | |
| **11. அலுவலர் குழாத்து முகாமைத்துவம்** | | | |
| *11.1 அனுமதிக்கப்பட்ட பதவியணிக்குள் அலுவலர் குழாத்தினருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.* | **இணங்கியுள்ளது** | | |
| *11.2 அலுவலர் குழாத்தினரின் சகல உறுப்பினர்களுக்கும் கடமைப் பட்டியலொன்று எழுத்தில் வழங்கப்பட்டுள்ளது.* | **இணங்கியுள்ளது** | | |
| *11.3 முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2017.09.20 ம் திகதிய 04/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு ஏற்ப சகல அறிக்கைகளும் அத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.* | **இணங்கியுள்ளது** | | |
| **12. அண்மைக்கால இற்றைப்படுத்தல்களுடன் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல்** | | | |
| *12.1 காணி மற்றும் கட்டடப் பதிவேடு* | | **இணங்கவில்லை** | *தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.* |
| *12.2 நிலையான சொத்துப் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.3 ஒப்பந்தப் பதிவேடு* | | **இணங்கவில்லை** | *தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.* |
| *12.4 கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.5 காசோலை மற்றும் காசுக்கட்டளைப் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.6 இருப்புப் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.7 நுகர்வுப் பொருள் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.8 இழப்புக்களுக்கான பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.9 அடியிதழ் (அடிக்கட்டை) புத்தகப் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.10 முற்பணப் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.11 கைத்தொழில்/வியாபார வரிப் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.12 கடன்பட்டோர் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.13 கடன்கொடுத்தோர் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |

| | | | |
|---|---|---|---|
| *12.14 கேள்விச் சபைத் தீர்மானப் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.15 தெரு விளக்குப் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.16 கணக்கெடுப்புப் புத்தகம்* | **இணங்கியுள்ளது** | | |
| *12.17 வீதி பற்றிய ஆய்வு* (Road Inventory) | | **இணங்கவில்லை** | தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| *12.18 காணித் துண்டாக்க வரிப் பதிவேடு* | | **இணங்கவில்லை** | தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| *12.19 கட்டட விண்ணப்பப் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| *12.20 இசைவு மதிப்பீட்டுப் பதிவேடு* | **இணங்கியுள்ளது** | | |
| ***13. கழிவு முகாமைத்துவம்*** | | | |
| *13.1 தேசிய கொள்கைகளுக்கு இணங்க கழிவு முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது* | **இணங்கியுள்ளது** | | |
| *13.2 சபைப் பிரதேசத்தில் குப்பைகூளங்கள் பாகுபடுத்தப்பட்டு சேகரிக்கப்பட்டிருந்தன.* | **இணங்கியுள்ளது** | | |
| ***14. சுற்றாடல் செயற்பாடுகள்*** | | | |
| *14.1 பிரதேசத்தில் முறையற்ற கழிவகற்றல் காரணமாக சுற்றாடல் பாதிக்கப்பட்டிருந்தது* | | **இணங்கவில்லை** | |
| *14.2 பிரதேசத்தில் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் தீங்கான உமிழ்வுகளிலிருந்து சுற்றாடலுக்கு ஏற்பட்ட தீங்கினைக் கட்டுப்படுத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.* | **இணங்கியுள்ளது** | | |
| ***15. துணைச் சட்டங்கள்*** | | | |
| *15.1 எந்தப் பிரதான நோக்கங்களுக்காக துணைச் சட்டங்கள் ஆக்கப்பட வேண்டுமோ அந்நோக்கங்களுக்காக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவுக்கு ஏற்ப துணைச்சட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளன.* | **இணங்கியுள்ளது** | | |
| *15.2 முன்னர் குறிப்பிடப்பட்ட துணைச் சட்டங்களுக்கு ஏற்ப சபையினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகளானவை* | **இணங்கியுள்ளது** | | |

| | | | |
|---|---|---|---|
| வருடாந்தச் செயற்றிறன் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | | | |
| 15.3 அத்தகைய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |
| 16. **பொது மக்களுக்குத் தகவல்களை வழங்குதல்** | | | |
| 16.1 தகவலறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்ப ஒரு தகவல் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முறையான தகவல் பதிவேடொன்று பேணப்படுகின்றது. | **இணங்கியுள்ளது** | | |
| 16.2 பொது மக்களுக்கு நிறுவனம் பற்றிய தகவல்களானவை இணையத்தளம் அல்லது மாற்று நடவடிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன என்பதுடன் அரசாங்க அதிகாரியைப் பாராட்டுவதற்கு/ அவருக்கு எதிராக குற்றஞ் சாட்டுவதற்கு இவ்விணையத் தளம் அல்லது மாற்று நடவடிக்கைகள் மூலம் பொது மக்களுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளதா? | **இணங்கியுள்ளது** | | |
| 16.3 தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 08 ஆம் 10 ஆம் பிரிவுகளுக்கு அமைவாக அரையாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகிறது. | **இணங்கியுள்ளது** | | |
| **17. கட்டடத்தின் திட்டங்களை அனுமதித்தல்** | | | |
| 17.1 சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சகல கட்டடத் திட்டங்களையும் பெற்றுக்கொண்டமையைப் பதிவுசெய்வதற்கு ஒரு பதிவேடு பேணப்பட்டுள்ளதுடன் பெற்றுக்கொண்ட திகதி மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்ட திகதிகள் அதில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |
| 17.2 விண்ணப்பங்களுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் பற்றி 05 நாட்களுக்குள் உரிய ஆளுக்கு அறிவிக்கபட்டுள்ளது. | | **இணங்கவில்லை** | |
| 17.3 விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஒரு வாரத்திற்குள் நடாத்தப்படும் திட்டமிடல் குழுவின் முதலாவது கூட்டத்திற்கு | | **இணங்கவில்லை** | |

| | | | |
|---|---|---|---|
| விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | | |
| 17.4 பிரசைகள் பட்டயத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதியில் (08 வாரங்களுக்குள்) கட்டடத் திட்டங்களில் 80% இற்கும் கூடுதலானவற்றுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. | | **இணங்கவில்லை** | |
| **18. பிரசைகள் பட்டயத்தினை நடைமுறைப்படுத்தல்** | | | |
| 18.1 அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2008(1) ம் இலக்க சுற்றறிக்கைக்கு ஏற்ப இந்நிறுவனத்தினால் பிரசைகள் பட்டயம் ஒன்று உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 18.2 இச்சுற்றறிக்கையின் 2.3ம் பந்திக்கு அமைவாக பிரசைகள் பட்டயம்/பிரசைகள் வாடிக்கையாளர் பட்டயத்தின் உருவாக்கத்தையும் அமுலாக்கத்தையும் கண்காணித்து மதிப்பிடும் பொருட்டு முறைமையொன்று இந்நிறுவனத்தினால் வகுக்கப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| **19. மனித வளத் திட்டத்தைத் தயாரித்தல்** | | | |
| 19.1 2018.01.24ம் திகதிய 02⁚.2018ம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் இணைப்பு 02 இலுள்ள மாதிரிக்கு ஏற்ப மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 19.2 அலுவலர் குழாத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வருடமொன்றுக்கு 12 மணித்தியாலத்திற்குக் குறையாத குறைந்தபட்ச பயிற்சி வாய்ப்பொன்றானது மேற்கூறப்பட்ட மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 19.3 மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இலுள்ள மாதிரியின் அடிப்படையில் முழு அலுவலர் குழாத்தினருக்கும் வருடாந்தச் செயற்றிறன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |
| 19.4 மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு அமைவாக சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் | **இணங்கியுள்ளது** | | |

| | | | |
|---|---|---|---|
| ஆற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியும் மனிதவள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு அவருக்குக் குறித்தொதுக்கப் பட்டுள்ளது. | | | |
| ***20. இலத்திரனியல் உள்ளூராட்சி முறைமையினைத் தாபித்தல்*** | | | |
| *20.1 2018.07.19* ஆம் திகதிய 2018/e-Local Government-01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கைக்கு இணங்க இணையவழி மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான வசதி பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. | | **இணங்கவில்லை** | |
| *20.2* இணையவழி மூலம் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான வசதி பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. | | **இணங்கவில்லை** | தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| *20.3* மக்கள் நட்புறவு சேவையொன்றை வழங்குவதற்கு முன்னணி அலுவலகங்கள் மற்றும் வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |